நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

11 June 2016

2016

தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு (ஆண்டு 5, 6)
Level : Intermediate - Lower (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 60 Minutes (Including 10 minutes of reading time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

கீழே தரப்பட்ட படங்களை உபயோகித்து 1 முதல் 10 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1. மாணவர்கள் விடுமுறை முடிந்து .................................................... திரும்பினார்கள்.

(a) பாடசாலை

(b) கோவில்

(c) வீடு

(d) சந்தை



2. கண்மணி .................................................... பெய்ததனால் குடை பிடித்து வெளியே சென்றாள்.

(a) வெயில்

(b) தூசு

(c) காற்று

(d) மழை



3. கன்பராவில் இருந்து தாத்தா .................................................... பயணம் செய்தார்.

(a) தொடருந்தில்

(b) மோட்டார் வண்டியில்

(c) ஆகாய விமானத்தில்

(d) பேருந்தில்



4. புயல் காற்றினால் .................................................... கீழே சரிந்து விழுந்தன.

(a) மரங்கள்

(b) வீடுகள்

(c) கடைகள்

(d) மனிதர்கள்



5. மேடையில் .................................................... பாட்டுப் பாடினான்.

(a) பாடகன்

(b) பாடகி

(c) சிறுமி

(d) பெண்



6. அப்பா மதிய உணவிற்காக .................................... சாப்பிட்டார்.



(a) சோறும் கறியும்

(b) பாணும் முட்டையும்

(c) பாலும் பழமும்

(d) குளிர் பானம்

7. வாணியும் அம்மாவும் .................................... பார்த்து ரசித்தனர்.



(a) வானொலியில் பாடல்

(b) கதைப் புத்தகம்

(c) தொலைக்காட்சியில் திரைப்படம்

(d) உணவு

8. வேலை முடிந்து திரும்பிய அக்கா தனது ....................................



(a) கால் கழுவினார்

(b) உடல் கழுவினார்

(c) வீடு கழுவினார்

(d) முகம் கழுவினார்

9. கண்ணன் அணி .................................... போட்டியில் வெற்றி பெற்றது.




(a) உதைப்பந்தாட்டப்

(b) துடுப்பாட்டப்

(c) நீச்சல்

(d) ஓட்டப்

10. யுத்தம் காரணமாக .................................... இடிந்து தரைமட்டமாகின.



(a)) மரங்கள்

(b)) பூக்கள்

(c)) வாகனங்கள்

(d)) கட்டிடங்கள்

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 11 முதல் 15 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

ஒரு காட்டிற்கு இரண்டு விறகுவெட்டிகள் சென்றார்கள். மாலை இருவரும் கூடும் பொழுது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றவருக்கு அதிக ஆச்சரியம். நம்மைப் போல தானே அவனும் அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமானது என்ற ஆர்வத்தினால் இவ்வளவு விறகுகள் பெறுவதற்கு என்ன செய்தாய் என்ற கேள்வியை அவனிடம் கேட்டான். அவனது நண்பன் நான் இடைவிடாமல் வெட்டிக்கொண்டே இருந்தேன் என்று சொன்னான். அதற்கு அவன் ஓய்வில்லாமல் வெட்டக் கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான். நான் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன் என்று நண்பன் சொன்னான். மறுநாள் அவனும் அதே போல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான். இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்ட முடியவில்லை. மறுநாள் மரம் வெட்டும் பொழுது ஒளித்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான். அடுத்த நாள் அவன்இ அவனது நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பனும் அரை மணி நேரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடரியைத் தீட்டிக் கொண்டிருந்தான்.

11. காட்டிற்குள் யார் சென்றார்கள்? எதற்காகச் சென்றார்கள்?
(a) மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக
(b) வீரர்கள் யுத்தம் செய்வதற்காக
(c) விறகு வெட்டிகள் விறகு வெட்டுவதற்காக
(d) உல்லாசப் பிரயாணிகள் சுற்றிப் பார்ப்பதற்காக

12. ஏன் ஒரு நண்பன் மற்றைய நண்பனை பார்த்து ஆச்சரியப்பட்டான்?
(a) தன்னை விட அதிகம் பூக்கள் சேர்த்திருந்தான் என்ற காரணத்தினால்
(b) தன்னை விட அதிகம் விறகு வெட்டியிருந்தான் என்ற காரணத்தினால்
(c) தன்னை விட அதிகம் உணவு உண்டிருந்தான் என்ற காரணத்தினால்
(d) தன்னை விட அதிகம் விறகு வளர்த்திருந்தான் என்ற காரணத்தினால்

13. நண்பன் ஏன் ஒளித்திருந்து பார்க்க விரும்பினான்?
(a) முதல் நாள் நண்பனின் அறிவுரைப்படி ஓய்வு எடுத்தும் அதிகம் சேர்க்க முடியவில்லை
(b) மிருகங்களுக்கு பயந்து ஒளித்திருந்தான்.
(c) மழை பெய்ததினால் நனைந்து போகாமல் இருப்பதிற்காக
(d) நண்பன் விறகு அதிகம் சேர்ப்பதின் இரகசியத்தினை கண்டறிவதற்காக

14. நண்பன் கூடுதலான பலன் அடைந்ததன் காரணம் என்ன?
(a) ஓய்வு நேரத்தில் நண்பன் கூடுதலான நித்திரை கொண்டான்.
(b) ஓய்வு இன்றி தொடர்ச்சியாக அவன் வேலை செய்தான்
(c) ஓய்வு நேரத்தில் அவன் தன் கோடரியை கூர்மையாக்கிக் கொண்டான்
(d) மற்றைய நண்பனிடம் இருந்து திருடிக் கொண்டான்

15. இக்கதை கூறும் அறிவுரை என்ன?
(a) முயற்சி திருவினையாக்கும்
(b) காட்டிற்குள் சென்று வேலை செய்ய வேண்டும்
(c) வேலை செய்யும் போது ஓய்வு எடுக்க கூடாது
(d) நேரத்தை வீணாக செலவழிக்க வேண்டும்

16 முதல் 21 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்குப் பொருத்தமான எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க.

16. மாமாவின் வீட்டுத் தோட்டத்தில் அழகிய மலர்கள் வாடியிருந்தன.
   (a) விழுந்திருந்தன
   (b) மலர்ந்திருந்தன
   (c) மங்கியிருந்தன
   (d) சிரித்தன

17. தாத்தா நீண்ட நேரம் பயணம் செய்ததினால் களைப்படைந்திருந்தார்.
   (a) சோர்வாக இருந்தார்
   (b) உற்சாகமாக இருந்தார்
   (c) நித்திரை செய்தார்
   (d) தண்ணீர் குடித்தார்

18. அனைத்து மக்களையும் காப்பதாக மன்னன் வாக்குறுதி அளித்தான்
   (a) பாடவைப்பதாக
   (b) ஆடவைப்பதாக
   (c) அழிப்பதாக
   (d) அடிப்பதாக

19. கணவனை இழந்த கண்ணகி கோபத்தினால் மதுரை நகரையே எரித்தாள்.
   (a) சீறினாள்
   (b) பாடினான்
   (c) அணைத்தாள்
   (d) வரவேற்றாள்

20. பாம்பைக் கண்ட மாணவர்கள் பயத்தினால் எழுந்து நாலா பக்கமும் ஓடினார்கள்.
   (a) மகிழ்ச்சியால்
   (b) துணிவினால்
   (c) அழுகையால்
   (d) மயக்கத்தினால்

21. தோட்டத்தில் மேயுது வெள்ளை பசு அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி.
   (a) பச்சை
   (b) மஞ்சள்
   (c) சிவப்பு
   (d) கறுப்பு

கீழே தரப்பட்டுள்ள 22 முதல் 24 வரையான வினாக்களிலுள்ள முதுமொழிகளில் சரியான வசனத்தை தெரிவு செய்க.

22. (a) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
(b) முகத்தின் அழகு அகத்தின் தெரியும்
(c) தெரியும் அழகு அகத்தின் முகத்தில்
(d) அழகு முகத்தில் தெரியும் அகத்தின்

23. (a) மாடு அடியாத படியாது
(b) அடியாத மாடு படியாது
(c) படியாது மாடு அடியாத
(d) அடியாத படியாது மாடு

24. (a) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
(b) கடவுளை கைவிடப்படார் நம்பினோர்
(c) நம்பினோர் கைவிடப்படார் கடவுளை
(d) கைவிடப்படார் கடவுளை நம்பினோர்

25 முதல் 30 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வசனத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.

25. அழகிய <u>மாலைப் பொழுதில்</u> கண்ணனும் வாணியும் கோவிலுக்கு சென்றார்கள்.
(a) அந்திப் பொழுதில்
(b) காலைப் பொழுதில்
(c) மதியப் பொழுதில்
(d) இரவுப் பொழுதில்

26. <u>நிலத்தில்</u> விழுந்த சிறுமி வலி காரணமாக அழ ஆரம்பித்தாள்.
(a) தரையில்
(b) ஆகாயத்தில்
(c) வெளியில்
(d) தண்ணீரில்

27. வாணியின் <u>அன்னை</u> அவளை வாரி அணைத்துக் கொண்டாள்.
(a) தாய்
(b) தந்தை
(c) பாட்டி
(d) அக்கா

28. தாத்தாவின் கதைகளைக் கேட்டு வாணியும் கண்ணனும் <u>மகிழ்ச்சி</u> அடைந்தார்கள்.
(a) சந்தோசம்
(b) ஆரவாரம்
(c) துக்கம்
(d) மயக்கம்

29. புது வருடப் பிறப்பிற்காக வாங்கிய புதிய ஆடைகளை வாணியும் கண்ணனும் மகிழ்சியுடன் <u>அணிந்தார்கள்.</u>

(a) உடுத்தார்கள்
(b) எறிந்தனர்
(c) பறித்தனர்
(d) பரிமாறிக் கொண்டனர்

30. குமார் மேடையில் ஏறி, தான் வென்ற பதக்கத்தை அனைவருக்கும் <u>காட்டினான்.</u>

(a) வெளிப்படுத்தினான்
(b) எறிந்தான்
(c) பிடித்தான்
(d) மறைத்தான்

31 முதல் 35 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. குருவிகள் காலையில் பாடும் கீதம் எது?

(a) பறவைகீதம்
(b) உதயகீதம்
(c) இசைக்கீதம்
(d) குருவிகீதம்

32. மக்பை (magpie) என்ற பறவை மனிதர்களை என்ன செய்யும்?

(a) பாய்ந்து கடிக்கும்
(b) கொத்தித் துரத்தும்
(c) முத்தம் கொடுக்கும்
(d) ஒன்றும் செய்யாது

33. முதலையின் பற்கள் எப்படிப்பட்டவை.

(a) தட்டையானவை
(b) அகலமானவை
(c) கூர்மையானவை
(d) வளைவானவை

34. முதலைகள் எங்கு வசிக்கின்றன?

(a) மரத்தில்
(b) நிலத்தில்
(c) காட்டில்
(d) நீரிலும் நிலத்திலும்

35. அவுஸ்திரேலியாவில் ஆதிவாசிகள் பெருமளவில் வாழும் பிரதேசம் எது?

(a) கன்பரா
(b) வட அவுஸ்திரேலியா
(c) தஸ்மானியா
(d) சிட்னி

கீழே தரப்பட்டுள்ள 36 முதல் 40 வரையிலான சொற்களைச் சேர்த்து எழுதுக.

36. கை + எழுத்து = ..........................................

37. கிழக்கு + கரை = ..........................................

38. எழுத்து + பிழை = ..........................................

39. பூ + வாசம் = ..........................................

40. மிருகம் + காட்சி = ..........................................

கீழே உள்ள 41 முதல் 45 வரையிலான வினாக்களுக்குச் சரியான உறவு முறையைத் தெரிவு செய்க

41. அம்மாவின் அக்கா
 (a) சித்தி
 (b) பெரியம்மா
 (c) பாட்டி
 (d) அத்தை

42. அப்பாவின் தம்பி
 (a) பெரியப்பா
 (b) பாட்டா
 (c) சித்தப்பா
 (d) மச்சான்

43. அம்மாவின் அம்மா
 (a) அம்மா
 (b) அம்மம்மா
 (c) அக்கா
 (d) அண்ணி

44. அப்பாவின் தங்கை
 (a) தங்கை
 (b) தம்பி
 (c) மாமி (அத்தை)
 (d) மச்சாள்

45. அம்மாவின் தம்பி
 (a) மகன்
 (b) மருமகள்
 (c) மாமா
 (d) அண்ணா

கீழேயுள்ள 46 முதல் 49 வரையிலான வினாக்களுக்கு எழுத்துப்பிழையற்ற சொல்லை தெரிவு செய்க

46. (a) நண்பர்
(b) நன்பர்
(c) னன்பர்
(d) ணன்பர்

47. (a) ஆசிாயர்
(b) ஆசரியர்
(c) ஆசிரியர்
(d) ஆசிரிர்ய

48. (a) நகரம்
(b) னகரம்
(c) ணகரம்
(d) நாகரம்

49 (a) உறவினர்
(b) உரவினர்
(c) உழவினர்
(d) உனவினர்

50 வீட்டில் வளர்க்கும் ஒரு பிராணியைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.
(உதாரணம் நாய், பூனை, கிளி போன்றவை)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2016